www.padippakam.com

# ஏழைதாசன்

உலகத் தமிழர்களின் ஒப்பற்ற குரல்

* பிப்ரவரி - 2006 * இதழ் எண் : 132 * விலை ரூ. 5/-

**அன்பிற்கினிய வாசகப் பெருமக்களே!**

இனி உங்கள் அழைப்புகளை கீழ்க்காணும் புதிய கைப்பேசி (செல்போன்) இலக்கத்திற்கு விடுக்கலாம். குறுஞ்செய்தி அனுப்பலாம். இரவுபகல் 24 மணி நேரத்தில் எந்நேரமும் தொடர்புறலாம் **94427 - 76868.** மறு அறிவித்தல் வரும் வரை எமது தொலைபேசி இலக்கம் **0091-04322 - 226426** நடைமுறையில் இயங்கிக் கொண்டு இருக்கும் என்பதை அறியத் தருகிறோம்.



## விஞ்ஞானப் பட்டதாரி !
## மெஞ்ஞானத் திட்டதாரி !

படிப்பகம்

www.padippakam.com

# நல்ல தமிழ் வேண்டும்

ஆறறை கோடித் தமிழர்களில்
ஐம்ப திலக்கம் அனுப்புங்கள் !
நீறறை யாவார் சிங்களவர்
நிமிரும் தமிழர்த் தன்மானம் !
ஒருரை சொல்லுந் துணிவில்லார்
உளுத்துப் போனார் தமிழ்த்தலைவர் !
நீருறை பேச்சுத் தேவையில்லை
நெருப்புப் பொறிகள் எழவேண்டும் !

உட்பகை நமக்கு வடமொழிதான் !
உறுபகை ஊடகக் காட்சிகள்தான் !
கற்பழிக் கின்றான் தமிழச்சியை
கண்டேன் தமிழன் தூங்குகின்றான் ?
நெற்பத ராச்சுத் தமிழினம்; தன்
நிழலை எதிர்த்தே பெருமூச்சு !
கற்பனை வீரக் கதிர்க்காட்சிக்
கைகளில் வீழ்ந்தோம்; மதிவீழ்ச்சி !

எண்பது வயதைத் தாண்டியவர்
இன்னுந் துறவைத் தேடாமல்
புண்படுந் தமிழைக் காக்காமல்
புரட்டுத் திராவிடம் பேசுகிறார் !
தென்பட வில்லைத் திருநாட்டில்
தேன்தமிழ் காக்கும் அரசுவால் !
அன்பர் களேஉம் அடிதொழுதேன்
அப்பன் பெயர்த்மி ழால்எழுத!

– **முருகடியான்**, சிங்கப்பூர்.

## கட்டணம் அனுப்பும் வழிமுறைகள்

பணவிடை, காசோலை, வரைவோலை, கேட்போலை, பிரிட்டன், கனடா, அஞ்சல் ஆணைகள், வங்கிமூலம் வங்கிக்கு, ஏஜெண்ட், தனிநபர் மூலம், வெஸ்டர்ன் யூனியன் என எத்தனையோ வழிகளில் ஏழைதாசனுக்கு கட்டணங்கள் நன்கொடைகள் அனுப்பலாம். மனமிருந்தால் மார்க்கம் உண்டு.

**கைப்பேசி : 94427-76868**

## ஏப்ரல் - 2006 இதழ்

தலையிலே மொட்டை !
காதிலே பூ ! கையிலே திருவோடு !
மாண்புமிகு வாக்காளர் !

– ஏழைதாசன் விஜயகுமார்.

### அய்க்கூ சிறப்பிதழ்

- புத்தாண்டு, தேர்தல், அரசியல், காதல், பாடுபொருள் எதுவாகவும் இருக்கலாம்.
- ஒருவர் எத்தனைக் கவிதைகளும் அனுப்பலாம்.
- ஏழைதாசன் ஆண்டுக் கட்டணம் ரூ.60/- செலுத்தி இருத்தல் வேண்டும்.

- உங்கள் அய்க்கூக்களை. ஆசிரியரின் கைப்பேசி 94427-76868 என்ற இலக்கத்திற்கு குறுஞ்செய்தி (SMS) அனுப்பலாம்.
- குரல் வழியில் பதிவு செய்யலாம்.
- கடிதவழியில் படைப்புகளை அனுப்பி வைக்கலாம்.
- தொலை தொடர்புக்கு. 0091- 04322 - 226426 (இரவு 10.00 மணிக்கு மேல்)

**கடைசி நாள் : 31-03-2006**
முன்னதாக அனுப்புவது நலம்

**தமிழ்ப் புத்தாண்டுச் சிறப்பிதழ்**



படிப்பகம்

www.padippakam.com



# டாக்டர் அ. தேவராஜன்

## 80-வது பிறந்த நாள் விழா

16-12-2005 வெள்ளிக்கிழமை அன்று 80 ஆவது பிறந்த நாள் கண்ட சித்த மருத்துவ மேதை அரிமா டாக்டர். அ. தேவராஜன் அவர்கள் எல்லா வளமும் பெற்று நூறாண்டு காலம் வாழ வாழ்த்துகிறோம். செயற்கரிய செய்வார் பெரியர் என்பதை கடந்த பத்தாண்டுகளாக ஏழைதாசன் ஏட்டிற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வந்து உறுதிபடுத்தினார். கிறிஸ்துவ மதத்தினர் என்றாலும் மாற்று இனத்தவரையும் மதிப்பவர். அதிலும் பத்திரிகையாளர் என்றால் இருகரம் நீட்டி வரவேற்பவர். அன்னாரது கொள்கை, நெறிபிறழாதது. அவரது ஆன்மநேயம், மாந்த நேயம், மருத்துவ வழிமுறைகள் இளைய தலைமுறைகளால் அவசியம் பின்பற்றவேண்டியன. இந்தப் புதிய புத்தாண்டிலே இறை மைந்தன் இயேசுவாகிய கர்த்தர் சகலவிதமான ஆசீர்வாதங்களையும் தந்து அன்னாரது சேவைகள் மேன்மையுறச் செய்வாராக.

மியான்மர் (பர்மா)

## தமிழ் விழா



மியான்மர் (பர்மா) 4-1-2006 அன்று தமிழர் அறநெறிக் கழகம் நடாத்திய 27ஆம் ஆண்டு தமிழ் விழாவில் மலேசிய வணிகர் பாண்டியன், கழகத் தலைவர் கோ. கலைச்செல்வனாரிடம் நன்கொடை வழங்குகிறார். உடன் இருப்பவர்களும் மலேசியத் தோழர்கள்தான்.




## சீன வானொலியின் மெல்லிசை குறுந்தகடு

கடந்த 50 ஆண்டுகாலமாக தமிழ் ஒலிபரப்பை செய்து வருகிறது சீன வானொலி நிலையம். நமக்கு அனுப்பி உள்ள இக் குறுந்தகடு சீன இசைக் கலைஞர்கள் படைத்திருக்கும் சாதனைத்தகடு. பத்துப் பாடல்களை உள்ளடக்கிய இவை மெல்லிய இன்னிசை இராகங்கள் ஆகும். வீணை (Pipa), வயலின் (Erhu), நாதசுரம் (Suona), தமிழ் ஆகிய வாத்தியங்கள் தமிழுக்கும் சீனத்துக்கும் உள்ள ஒப்புறவை எடுத்துக் காட்டுகின்றன. சீன வானொலியில் பணிபுரியும் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் படித்த சகோதரிகள் கலைமகள், விஜயலெட்சுமி குழுவினரின் செயல்பாடுகள் யாவும் மெச்சத்தக்கவை ஆகும். அவர்களுக்கு நமது பாராட்டுக்கள்.



## பொங்கல் வாழ்த்து

புலம்பெயர்ந்து வாழும்
எமது தாயக உறவுகளுக்கு
ஏ. பி. சி. தமிழ்ஒளி வானொலி சார்பாக
நல்வாழ்த்துக்கள்.

- தமிழ் ஈழ முருகதாசன்,
(சின்னத்துரை இராசகருணா)
யேர்மனி.



படிப்பகம்

www.padippakam.com

# கற்பெனப்படுவது...



- வெற்றியூர் வேலு சதானந்தம்,
பகரைன்.

கற்பு பற்றிக் கதைக்கின்றோம்
காலங்காலமாக
கருத்துக் குருடர்களாய்.

கற்பில் சிறந்தவள்
கண்ணகியா மாதவியா
கோப்பெருந்தேவியா என்று
பட்டிமன்றம் வைத்து
வாய்கிழியக் கத்துகின்றோம்.

கற்பில் சிறந்தவன்
எவனென்று
எப்பொழுதும் நாம்
சொற்போர் நடத்திச்
சுகம் கண்டதில்லை.

பொம்பளையின் கற்புபற்றி
முருங்கைமரத்தில் ஏறும்
வேதாளமாய்
மீண்டும் மீண்டும்
பேசுகின்றோம்; பிதற்றுகின்றோம்!

ஆம்பளையின் கற்புபற்றி
அலசிப் பார்த்ததுண்டா ?

குப்பனுக்கு வாழ்க்கைப்பட்டு
வாழப் பிடிக்காமல்
சுப்பனைக் கட்டிக்கொண்டாள்
வள்ளி.
சுப்பனும் சரியில்லையென
முத்தனை நாடினாள்
அதோடு
முற்றுப்பபுள்ளி வைத்தாள்.

மூவரைப் புணர்ந்த
வள்ளி
கற்பில் சிறந்தவளாய்
வாழ்ந்திருப்பாள்
குப்பன் சுப்பன்களின்
குடியையும் அடியையும்
சகித்திருந்தால் !

இங்கே
ஆணுக்கொரு நீதி
பெண்ணுக்கொரு நீதி
அதுதானே
மனுவின் சமூகநீதி ?

ஆட்டக்காரியின் மீது
மையல்கொண்டு
வீட்டுக்காரியை விட்டவனுக்காய்
பன்னிரண்டு ஆண்டுகள்
பதிவிரதா தர்மம் இருந்ததைத்தானே
கற்பெனக் கதைக்கின்றோம் ?

இன்று ஏற்குமா
பெண்ணினம்
இப்படியொரு சோகம்
அவள் இருவிழிகள்
எழுதிடுமே கோபம் !

சதியென்ற உடன்கட்டையை
சரியென்று ஏற்கவில்லை
எல்லோரும்.
அறுத்துக்கட்டும் சாதிகளும்
விதவை மறுவாழ்வில்
அன்புகொண்ட நல்லோரும்
இருக்கத்தான் செய்தனா.

அய்யா
பருவம் திறந்தபின்னால்
பாவைக்கு
இனப்பெருக்கத் தேவைக்காய்
இயற்கையின் அழைப்புவரும்
அதைக் காதல் என்றாலும்
சரி
காமம் என்றாலும் சரி
புணர்தலில் முடியவேண்டுமென்பதே
இயற்கையின் விதி.

திருமணம் என்பது
ஊர் கூட்டி
அறிவிக்கும் சடங்கு
அது இல்லாவிடினும்
பெண்வயிற்றில் கருவாகும்
குழந்தைவடிவில் மனிதவிலங்கு.

உலகில் உண்டு
எத்தனையோ இனங்கள்
அவை
ஒன்றோடு ஒன்று கலந்து
மாறியிருக்கின்றன நிறங்கள்.

திராவிடன் கறுப்பன்தான்
இன்று மாறியிருக்கின்றான்
சிவப்பனாகவும்.



படிப்பகம்

www.padippakam.com

வடமேற்கு ஆசியாவிலிருந்து
வந்ததாகச் சொல்லும்
ஆரியனிலும்
இன்று உண்டு கறுப்பு.

சொல்லப்போனால்
இன்று
திராவிடனமில்லை
ஆரியனுமில்லை.

ஆணும் பெண்ணும்
திருட்டுத்தனமாய
ஒதுங்கும் போதெல்லாம்
கறபு கண்ணை மூடிக்கொள்ள
கலப்பு இனங்கள் தோன்றியுள்ளன.

இல்லையென்று
சொல்லமுடியுமா எவராலும்?

மனுநீதியில்
சாதியாதிக்கம் மட்டுமல்ல
சமத்துவத்துக்குத் தடை
ஆனாதிக்கமும் சேர்ந்தேதான்
அணிவகுக்கின்றது படை !

கற்பு
பெண்ணை அடிமைப்படுத்த
பின்னப்பட்ட வலை
அந்தக் கற்பு
ஆணுக்கும் பொதுவென்றால்
அறிவையர் நிச்சயம்
செய்யமாட்டார் பிழை.

பொருளாதார ரீதியில்
ஆணைச்சார்ந்து
பெண்வாழும் காலம்
என்று இருந்தது.
அதனால்தான்
ஆணாதிக்கம் வளர்ந்தது.

இன்று
பூவையர்கள், பூவையர்கள் அல்ல
பூமிக்குளிருந்து வெடித்துச்சிதறும்
பூகம்பம்.

மண்ணைப் பொன்னாக்கவும்
விண்ணை மண்ணாக்கவும்
அவர்களால் முடியும்.

அன்னையாகவும் வாழ்வர்
அரியணையில் அமர்ந்து
மண்ணையும் ஆள்வர்.

ஆணும் பெண்ணும்
இருவிழிகள் என்று
எப்பொழுதோ
எழுதிவிட்டனர் கவிகள்.

விழிகள்
இடமிருந்தாலும் வடமிருந்தாலும்
முடமில்லா விட்டால்தான்
பார்வையால் பிம்பங்கள்
மூளைக்குள் படமாகும்.

கண்ணகிக்கும் சீதைக்கும்
கற்புக்காய் கோயில்கட்டி
குடமுழுக்கு நடத்துவோம்.

புதுயுகத்தின் பெண்களை
வேலு நாச்சியராய்
ராணி மங்கம்மாளாய்
ஜான்சிராணியாய்
கல்பனா சாவ்லாவாய்
சானியா மிர்சாவாய்
அணிவகுத்து வெற்றிபெற
அணிதிரண்டு வாழ்த்துவோம்.

## நட்புத் திருவிழா

மும்பையில் இயங்கிவரும் இந்தியப் பேனா நண்பர் பேரவையின் திருநெல்வேலி கிளை நட்புத் திருவிழாவை சிறப்பாக கொண்டாடியது. சனவரி - 7,8 நாட்களில் சதுரங்கப் போட்டி, கட்டுரைப்போட்டி, வினாடி-வினா, போட்டிகளை ஓ.கே. வள்ளிவேல் துவக்கி வைத்தார். பேச்சுப்போட்டி ஓவியப் போட்டிகளும் நடைபெற்றன. வெற்றி பெற்றோருக்கு பரிசு திருமதி. பொ. செல்வம் வழங்கினார். பேரவையின் அனைத்து மாவட்ட, மாநில அமைப்பாளர் சிறப்பு ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்றனர். இப் பேரவையின் தலைவர் எம். கருண் தலைமை தாங்கினார். பொதுச் செயலாளர் எல். பாஸ்கரன், திருச்சி புலவர் தியாகசாந்தன் முன்னிலை வகித்தனர்.

## பாராட்டு விழா

புதுச்சேரியில் தமிழ் மாமணி விருதுபெற்ற நற்றமிழ் ஆசிரியர் புலவர். மு. இறைவிழியனார்க்குப் பாராட்டு விழா 8-1-2006 அன்று நடைபெற்றது. இவ்விழாவில் பாவரங்கம், கருத்தரங்கம், பாராட்டு அரங்கம் இடம் பெற்றது. மாண்புமிகு முதல்வர் ந. அரங்கசாமி, புலவர். மு. இறைவிழியன் இருவரது பணிகளையும் அனைவரும் பாராட்டினர்.



படிப்பகம்

www.padippakam.com

## 80-ம் ஆண்டு விழா

தோழர் அம்பி என்கிற தி. ரங்கசாமியின் 80 ஆவது பிறந்த நாள் விழா 26-1-2006 அன்று கோவையில் கலா மன்றம் சார்பில் நடைபெற்றது. கருத்தரங்கம், பாராட்டு விழாவில் தோழர் அம்பி சிறப்பிக்கப்பட்டார். விழாவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் தா. பாண்டியன் தலைமை வகித்தார். நாவலாசிரியர் பொன்னீலன் வாழ்த்துரை வழங்கினார்.

## வெளியீட்டு, பரிசளிப்பு விழா

மணிமேகலைப் பிரசுரத்தின் 20 நூல்கள் வெளியீட்டு விழாவும் இலண்டன் தமிழினி நடத்திய ஆதித்தனார் கட்டுரைப் போட்டி பரிசளிப்பு விழாவும் 15-1-2006 அன்று சென்னையில் நடைபெற்றது. உலகத் தமிழர் பேரவைத் தலைவர் பழ. நெடுமாறன் முன்னிலை வகித்தார் தமிழினி வ.மா.குலேந்திரன் தலைமை வகித்துப் பரிசுகளை வழங்கினார். நடிகர் பாண்டியராஜன், தமிழ்மணி மானாமக்கீன், தென்கச்சி சுவாமிநாதன், லேனா தமிழ்வாணன் உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர். சன் தொலைக்காட்சி செய்தி வாசிப்பாளர் திருமதி. ஜெயஸ்ரீசுந்தர் விழாவை நெறிப்படுத்தினார். அதிபர் இரவி தமிழ்வாணன் விழா ஒருங்கிணைப்பாளராகத் திகழ்ந்தார்.

## மனிதநேய இலக்கியப் பரிசு - 2005

2005 ஆம் ஆண்டு வெளிவந்த நாவல், கவிதை, சிறுகதை, சட்டம், விழிப்புணர்வு, கட்டுரை நூல்கள் மற்றும் ஓராண்டு சிற்றிதழ்களும் வரவேற்கப்படுகின்றன. பரிசு ரூ. 1000/- மும் விருதும் வழங்கப்படும். நூல்கள் 2 பிரதிகள் அனுப்ப வேண்டும். கடைசி நாள் : 28-02-2006 முகவரி : சோலைப்பிரியன், பெரியார் காமராசர் பேரவை, 54/4, புதூர் கிழக்குத்தெரு, ரெட்டியூர் (அஞ்சல்) சோலையார்பேட்டை - 635851, வேலூர் மாவட்டம்.

## நூல் திறனாய்வுப் போட்டி

சுஜாதாவின் கோணல் பார்வை - ந. வெற்றியழகன் எழுதிய மறுப்புக் கட்டுரைகள் சிறு நூலாக வெளிவந்துள்ளது. இந்நூல் பற்றிய திறனாய்வுப் போட்டிக்கு கட்டுரைகள் வரவேற்கிறார்கள். பரிசுகள் நூல்களாக ரூ.150, ரூ. 100, ரூ.50, முகவரி : அறிவுச் சுடர்வெளியீடு, 417, முருகன் இல்லம், பாரதிபுரம் முதல்தெரு, கைலாசபுரம், திருச்சி - 14. கடைசி நாள் 31-3-2006.

## சாகித்திய அகாதெமி - கவிசந்தி

புகழ்பெற்ற தமிழ்க் கவிஞரும் விமர்சகருமான இரா. பாலச்சந்திரன் என்கிற பாலா சாகித்திய அகாதெமிக்காக கவிதை வாசிப்பு நிகழ்ச்சி புதுக்கோட்டையில் 26-1-2006 அன்று நடைபெற்றது. அனைவரையும் கவிஞர் தங்கம் மூர்த்தி வரவேற்றார். கவிஞர் நா. முத்து நிலவன் அறிமுக உரையாற்றினார். கவிசந்தி நிகழ்வும் சாகித்திய அகாதெமி அமைப்பும் பற்றி பன்மொழி வல்லுநர் ஜிஜேந்திரநாத் விளக்கம் அளித்தார். பின்பு கவிஞர் பாலாவின் கவிதை வாசிப்பு, கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது.

## சிற்றிதழ் கருத்தரங்கு

மாநில அளவிலான சிற்றிதழ்களுக்கான கருத்தரங்கம் பிப்ரவரி இரண்டாவது வாரத்தில் சேலத்தில் முதன்முறையாக நடைபெற இருக்கிறது. சிலம்பொலி செல்லப்பனார் தமிழ்க் காப்பு மன்றம் மொழி - இலக்கியம் கலாச்சார மேம்பாட்டிற்கு ஒருங்கிணைந்த செயற்பாடு என்னும் பொருளில் நடைபெறும் என அறிவித்துள்ளது. செவ்வியல் மொழிக்கான நடுவன் அரசு வாரிய உறுப்பினர்கள் கலந்து கொள்வார்கள்.

## ஏழைதாசன் ஆய்வு

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்ட ஆய்வு செய்து வருகிறார் எஸ். புகழேந்தி. இவர் முதுகலை பட்டமும் கல்வியியல் நிறைஞர் பட்டமும் பெற்றவர் ஆவார். இவர் தற்போது தமிழ்ச் சிற்றிதழ்களில் அய்க்கூ என்ற தலைப்பில் ஆய்வு செய்ய இருக்கிறார். இப்பணிக்காக 2000-2002 ஏழைதாசன் இதழ்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்படுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

தொலைபேசி அழைப்புகள்

## இலண்டன் தமிழினி குலேந்திரன்

நான் இலண்டன் தமிழினி மஞ்சரி ஆசிரியர் வ.மா.குலேந்திரன் பேசுகிறேன். வணக்கம். சென்னை புத்தகத் திருவிழாவில் "அகராதிக் கவிதைகள்" என்ற எனது நூல் வெளியீட்டு விழா மற்றும் தமிழினியும் மணிமேகலைப் பிரசுரமும் நடத்திய ஆதித்தனார் கட்டுரைப்போட்டி பரிசளிப்பு விழாவுக்காக வந்திருக்கிறேன். சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் இறங்கியதும் திரு. இரவி தமிழ்வாணன் வரவேற்க வந்திருந்தார். நீங்கள் அவருக்கு அனுப்பி இருந்த ஏழைதாசன் சனவரி-06 இதழை என்னிடம் காட்டினார். எனது படத்தை முகப்பு அட்டையில் வெளியிட்டு உள்ளே ஒரு முழுப்பக்கம் கட்டுரையும் பிரசுரமாகி இருப்பதைப் பார்த்து மிகவும் மகிழ்வுற்றேன். நீங்கள் புத்தகத் திருவிழாவிற்கு வருவீர்கள் சந்திக்கலாம் என்று எண்ணிதான் இங்கு வந்தேன். உங்களைச் சந்திக்க இயலாதது பெரும் ஏமாற்றமே. பரவாயில்லை... உங்கள் இதழ் முயற்சி சிறக்க என்னால் இயன்றதை ஏழைதாசனுக்கு உறுதியாக நிச்சயம் செய்வேன். இலண்டன் சென்றதும் உங்களுக்கு உதவுவேன் நன்றி. வணக்கம். (14-01-2006 அன்றிரவு 10-40 மணி)

## இலங்கை எழுத்தாளர் மானா மக்கீன்

இலங்கை எழுத்தாளர் மானா மக்கீன் பேசுகிறேன். வணக்கம். ஏழைதாசன் எனது முகவரிக்கு நீண்ட மாதங்களாக வந்து கொண்டு இருந்தது. சிறு பத்திரிகையானாலும் அருமையான பத்திரிகை. ஏன் அனுப்புவதை நிறுத்தி விட்டீர்கள்? என் மீதுதான் தவறு. அப்போதே ஏதாவது கட்டணம் செலுத்தி இருக்கலாம். அதனால் என்ன? இப்போது 300 பிரதி இருந்தால் கொடுங்கள். விலைக்கு வாங்கிக் கொள்கிறேன். சென்னை புத்தகத் திருவிழாவில் எல்லோருக்கும் கொடுக்கலாம். என்ன கைவசம் இதழ் பிரதிகள் இல்லையா? உங்களுக்குக் கிடைத்த அருமையான வாய்ப்பைத் தவறவிட்டு விட்டீர்கள். இந்தச் சந்தர்ப்பத்திலாவது உங்களுக்கு என்னால் ஒரு உதவி செய்யலாம் என்று நினைத்தேன். சரி ! பிற்பாடு பேசுவோம். உங்களை விழாவில் நேரில் சந்திக்கலாம் என்று நினைத்தேன். அதுவும் இயலவில்லை. இலண்டன் குலேந்திரன் அவர்கள் நல்ல தமிழ் நெஞ்சினர். அவர் தாராளமாக உதவக் கூடியவர். அவருக்குத்தான் "ஒருமுண்டாசுக் கவிஞரின் முஸ்லீம் நேசம்" என்ற எனது நூலை காணிக்கை ஆக்கி உள்ளேன். உங்களிடம் அவர் இப்போதுதான் பேசினேன் என்று கூறினார். அதுதான் நாமும் பேசுவோம் என்று டெலிபோன் எடுத்தேன். திரு. இரவி தமிழ் தமிழ்வாணன் அவர்கள்தான் ஏழைதாசன் இதழைக் காட்டினார். தமிழினி குலேந்திரன் அட்டைப் படம், செய்தி அனைத்தும் அருமையாக உள்ளது. மிக்க நன்றி. வணக்கம். (14-01-2006 அன்றிரவு 12.20 மணி)

## கவிஞர் வேலணையூர் பொன்னண்ணா

டென்மார்க்கில் இருந்து பொன்னண்ணா பேசுகிறேன். வணக்கம். உங்களுக்கும் உங்கள் வீட்டில் உள்ள அனைவருக்கும் மற்றும் அங்கு வாழும் அனைத்து நண்பர்களுக்கும் ஏழைதாசன் இலக்கிய சஞ்சிகையின் வாசகப் பெருமக்கள் அனைவருக்கும் எனது இதயம் நிறைந்த பொங்கல் திருநாள் புத்தாண்டு வாழ்த்துக்கள் வழங்கி மகிழ்கின்றேன். இங்கு ஒரே பனிப்பொழிவு. கடுமையான குளிர். வெளியே வரமுடியவில்லை. அங்கு உங்கள் சுகம், தாயார், மனைவிமார் சுகம் எப்படி உள்ளது ? குறிப்பாக உங்கள் மனைவி சுகமாக இருக்கிறார்களா ? பெண் குழந்தை பிறந்திருக்கிறதா ! மிகவும் மகிழ்ச்சி. என்ன பெயர் சூட்டி இருக்கிறீர்கள்? "இனியா" வா ! மிக மிக அருமையான பெயர். நல் வாழ்த்துக்கள் உங்கள் மனைவிக்கு. ஆசீர்வாதங்கள் குழந்தைக்கு. இன்னும் தாய் வீட்டிலிருந்து வரவில்லையானால் பரவாயில்லை. உங்கள் இல்லத்திற்கு வந்த பின்பு நானே ஒரு நாள் பேசுவேன். தைப்பொங்கலுக்கு முன்பே உங்களுக்கு ஒரு கடிதமும் வாழ்த்தும் அனுப்பி உள்ளேன். எனது சுயசரிதத்தை எழுதி வருகின்றேன். அது பற்றி நீங்களும் ஒரு வாழ்த்துரை வழங்கவேண்டும். பன்னாடுகளில் ஏழைதாசன் பவனி வரும் செய்தி இதயத்திற்கு இதமானது. தமிழ்ப்பணி, இலக்கியப் பணியாற்றும் உங்களுக்கு நான் வணங்கும் அம்பாள் அருள்பாலிப்பாளாக. எதற்கும் கவலைப்பட வேண்டாம். எனது பூரண அன்பும் ஆசியும் எப்போதும் உங்களுக்கு உண்டு. உற்றார் உறவினர் அனைவருக்கும் பொன்னண்ணாவின் தமிழர் திருநாள் வாழ்த்துக்களைக் கூறுங்கள். கடிதம் கிடைத்ததும் பதில் போடுங்கள். நன்றி. வணக்கம். (16-01-2006) அன்று இரவு 8.30 மணி)

## நோர்வே சர்வதேச தமிழர் என்.எஸ்.பிரபு

ஏழைதாசன் ஆசிரியர் இருக்கிறார்களா ? நோர்வே நாட்டிலிருந்து கவிஞர் என்.எஸ். பிரபு பேசுகிறேன். அன்றொரு நாள் சென்ற வாரம் தொலைபேசி எடுத்தேன் அப்போதும் அவர் இல்லை. இப்போதும் வெளியே சென்று உள்ளாரா? சரிங்கம்மா... நான் கூற வேண்டிய விடயத்தைக் கூறிவிடுகிறேன். அவர் வந்ததும் சொல்லிடுவிங்கதானே என்ன ! எனது அகவை 50 ஆனதை முன்னிட்டு இவ்வாண்டு பொன்விழாவாக கொண்டாட உள்ளோம். அது சமயம் நூலொன்றும் வெளியிட திட்டம். அதற்கு ஒரு வாழ்த்துப்பா எழுதி விரைந்து அனுப்பி வைக்கச் சொல்லுங்கோ. அனைவருக்கும் நன்றியும் வணக்கமும்.
(8-01-2006 காலை 11.30 மணி 17-01-2006 மாலை 3.45 மணி)



படிப்பகம்

www.padippakam.com

அட்டைப்படக் கட்டுரை :

# விஞ்ஞானப் பட்டதாரி! மெஞ்ஞானத் திட்டதாரி!



கனடாவில் வசிக்கும் விஞ்ஞானப் பட்டதாரியான அ.பொ.செல்லையா ஒரு தலைசிறந்த எழுத்தாளர், பேச்சாளர் ஆவார். இலங்கையில் 1998 இல் 306-பியில் சிறந்த செயலாளராக வெற்றி பெற்று, இருபத்தொரு கேடயங்களை அரிமா சங்கத்திற்கு வாங்கித் தந்தவர். தமிழிலும் அறிவியலிலும் சிறந்த ஆற்றலுடைய இவரின் படைப்புத் திறன் மகத்தானது.

இலங்கை தென்மராட்சி பெற்ற சாதனையாளரான இவர், ஓர் இலக்கை நோக்கிச் செல்லும் இலட்சியவாதி. "மக்கள் சமுதாயத்திற்கு வழிகாட்டிச் சிந்திக்கும் நாம் எமது வாழ்க்கையையும் தூய்மைப்படுத்தி மனக்கட்டுப்பாடுகளைக் கடைப்பிடித்து வாழ வேண்டும்" என்பது, மதப் பெரியோர்களினதும் பகுத்தறிவுச் சிந்தனையாளர்களினதும் போதனையாகும். இந்நோக்கில் அ. பொ. செ. அவர்கள் இளமை முதல் சொல்லும் செயலும் ஒன்றென வாழ்ந்து காட்டும் இலக்கியச் சுடர் எனலாம்.

கடுஞ்சொல்லும் முறை கடந்து தூற்றியும், இழித்துப் பழித்து சேறு பூச, அழிக்க நினைத்திடும் இழிவுடையோரையும் மன்னித்து மறந்து.-

பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை
மறத்தல் அதனினும் நன்று (குறள் : 152)

என்ற குறளுக்கமையப் பொறுமைக் காட்டும் மிக உயர்ந்த பண்புடையவர். சொல்லின் செல்வராகத் திகழும் அவரது தமிழாற்றல் மிகவும் உன்னதமானது. சமூகப் பணி மிகவும் உயர்ந்தது. வைத்தியக் கலாநிதி சி.சி. அருளானந்தம் இவ்வாறு கூறுகிறார்.

**அ. நூல்கள் :**

காலத்தின் விதி - கதை - 1965 யார் கொலைகாரன் - நாடகம் - 1968, தாய்க்குலமே விழி ! எழு ! -1970, நான் கண்ட அண்ணன் - 1970, இன்பத் தமிழரசு - 1970, பொங்கட்டும் தமிழுணர்ச்சி -1975, ஏன் வேண்டும் இன்பத் தமிழ் ஈழம் - 1975, உரிமைப் போர் -1977, இன்பத் தமிழரசு 2-ம் பதிப்பு 1978, கல்வி பற்றிச் சிந்திப்போம் செயற்படுவோம் - 1993, கலங்கரை விளக்கம் - 1998, கேட்கட்டும் குறளின் குரல் - 2002 எய்ட்ஸிலிருந்து பாதுகாத்துக் கொள்வது எப்படி - 2003 ஆகிய நூல்கள் எழுதி உள்ளார்.

**ஆ. கலை மன்ற நாடகங்கள் :**

(கதை, வசனம், நெறியாள்கை, தயாரிப்பு, மேடையேற்றம், நடிப்பு) மன்னார்குடி மார்த்தாண்டன் - 1959, நஞ்சன் நாகப்பா - 1960, நாகபுரி நாகேந்திரன் - 1961, சதிகாரன் சபாபதி 1962, இரும்புத் தலைவன் - 1963, ஒன்றே குலம் - 1963, மணியகாரன் மகன் - 1963, கோமாளி - 1963, கடலூர் காளியப்பன் - 1964, பியோன் பீதாம்பரம் - 1966, சிந்திய இரத்தம் - 1967, சாவின் மடியில் -1968, கோடையிடி மயிலு - 1968, மருதடி மணியன் - 1979, காசிக்குப் போவோம் - 1982, மானவீரன் மாணிக்கம் - 1982, ஆகிய நாடகங்களில் பலதடவை மேடையேற்றப்பட்டவை. கொழும்பிலும் சில மேடையேற்றப்பட்டவை.

**இ. பாடசாலை மாணவர்கள் நடித்த நாடகங்கள் :**

யார் கொலைகாரன் - 1968, காஞ்சியின் செல்வன் - 1978, மதுரை மன்னன் - 1989, மனமாற்றம் - 1990, விழுந்தால் திருமணம் -1991, தலை எடுத்தான் தம்பி - 1992, அன்பே தெய்வம் - 1993 ஆகியவற்றில் முதல் நாடகமானது அகில இலங்கை கலைக்கழகம் 1968இல் நடாத்திய பாடசாலைகளுக்கிடையிலான நாடகப் போட்டியில், சமூக நாடகப் பிரிவில் முதலாம் இடத்தைப்பெற்றது. மட்டுவில் மகா வித்தியாலய மாணவிகள் இதனை நடித்திருந்தனர். கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் பாராட்டியுள்ளார்.



படிப்பகம்

www.padippakam.com

**ஈ. வானொலி நாடகங்கள் :**

ஆசையின் அவலம் - கதம்ப நிகழ்ச்சி - 1982, முருகன் செயல் - 23-5-1982, நீதி நிலைத்தது - 13-6-1982, தீர்க்க தரிசனம் பாகம் 1 1-8-1982, தீர்க்க தரிசனம் 2 பாகம் 8-8-1982 வெகுமானம் 22-8-1982 மணிக்கக் குழந்தைகள் 3-10-1982 மனசாட்சி - 31-10-1982 ஆகியவை சிறுவர் நிகழ்ச்சியில் ஒலிபரப்பானவை.

**உ. மாத இதழ் - சஞ்சிகை**

"தாய் நாடு" - 1963 இல் கொழும்பிலிருந்து வெளியானது. அகில இலங்கை ரீதியாகச் சுற்றோட்டமிருந்தது. "தென்மராட்சி" - 1966 சாவகச்சேரியிலிருந்து வெளியானது.

**ஊ. சிறுகதைகள் பல :**

சஞ்சிகைகளில் வெளி வந்துள்ளன.

**எ. கட்டுரைகள் பல :**

சஞ்சிகைகளில் வெளிவந்துள்ளன.

**ஏ. மொழிபெயர்ப்பு :**

1. உங்கள் நலத்தை நிர்வகித்தல் - வெளியீடு ASAP கனடா - 2001 ஆண்டுப் பதிப்பு.
2. உரிமைகள் சுதந்திரங்களுக்கான கனடிய சாசனம் - 2001.

**அ. பொ. செல்லையாவின் புனை பெயர்கள் :**

1. சேரன் 2. வரைபாலன் 3. அண்ணதாசன் 4. பொற்செல்வன் 5. தென்னவன்

**புகழ்**

தோன்றிற் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று. (குறள் : 236)

புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும் தமிழ் வாழ, தமிழன் வாழ இன்றியமையா பணியாற்றும் அன்னார் அ.பொ. செல்லையா அவர்களுக்கும் அவரது திருமகனார் ஆதவன் வெளியீட்டகம் மூலம் "தமிழன் வழிகாட்டி" வெளியிட்டு வரும் பதிப்புத் துறை சாதனையாளர் திரு. செந்தி செல்லையா அவர்களுக்கும் ஏழைதாசன் நல்வாழ்த்துக்களை நவில்கின்றான்.

## அன்னைப் பெருநிலவு

- வேதா. இலங்காதிலகம்
டென்மார்க்.

அன்னை மகளின் அன்புறவு
அர்த்தமுடை பெண்மைப் பதிவு.
அன்னைமடி ஆற்றைப் பிறைநிலவு
அர்த்தமுடை இற்றை முழுநிலவு.

அருகிருந்த மன அணைவு
அருவிச்சாரல் குளிரிணைவு.
அகவிதழ் விரித்த அனுபவநிறைவு
அன்புறவுப் பால உன்னதவிரிவு.

மங்கை அருகு மணித்துளிகள்
மனம் நிறைந்த நேரங்கள்.
மனசிற்குள் பூக்கள் குவித்திட்ட
மதுரமான மதிப்புடை நாட்கள்.

செல்லக் கனவுச் செவ்வானமவள்
நல்ல கருத்தைத் தெளிவாயவள்.
சொல்லத் துணியும் பெண்மையவள்
வெல்லட்டும் வாழ்க்கையில் அவள்.

ஆன்மாவிற்குள் தேன் சொரிந்த
அந்த சுகநாட்கள் அறிவுசார்ந்த
சுந்தரப் பெண்ணுடன் கழிந்த
சுதந்திர மூன்று நாட்கள்.


ஏழைதாசன் — மலர் 14 - இதழ் 6

எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும்
- கண்ணதாசன்.

திருவள்ளுவர் ஆண்டு 2037 மாசி

**கட்டண விபரம்**

| | | |
|---|---|---|
| **உள்நாடு (அஞ்சல் வழி)** | | |
| ஆண்டுக் கட்டணம் | : ரூ. | 60/- |
| வாழ்நாள் கட்டணம் | : ரூ. | 600/- |
| புரவலர் நன்கொடை | : ரூ. | 1000/- |
| **வெளிநாடு (வான்வழி)** | | |
| ஆண்டுக் கட்டணம் | : | US$ 10/- |
| வாழ்நாள் கட்டணம் | : | US$100/- |
| புரவலர் நன்கொடை | : | US$200/- |
| **விளம்பரக் கட்டணம்** | | |
| வெளிநாடு | | |
| முழுப்பக்கம் | : ரூ. | 1000/- |
| அரைப்பக்கம் | : ரூ. | 500/- |
| உள்நாடு | | |
| முழுப்பக்கம் | : ரூ. | 500/- |
| அரைப்பக்கம் | : ரூ. | 250/- |

**பெயர்** : EALAIDHASON
**வங்கி இலக்கம்** : A/c No. 90259
**முகவரி** : INDIAN BANK, PUDUKKOTTAI - 622 001. TAMIL NADU, INDIA




படிப்பகம்

www.padippakam.com

# அகராதிக் கவிதைகள்

"அள்ளி எடுத்து / அணைத்து வளர்த்தும் / கொள்ளிக்கு உதவாதவள்" மகள் என்கிற தலைப்பில் இவரின் சிந்தனை பெண் குழந்தை மட்டுமே பெற்றவர்க்கு உள்ளத்து உணர்வாகும். அரசு மற்றும் தனியார் தொலைக்காட்சிகளின் பொய்மைப் போக்கை "ஊடகம்" கவிதை தோலுரிக்கிறது. அதே போன்று சிறை" கவிதையும் இவரது ஆய்வுக்குத் தப்பவில்லை. "தமிழன் மட்டும் / தமிழனைக் கண்டால் / தமிழில் பேசான் / செம்மறி மொழியோ ?" எனக் கூறி செம்மொழி என்று பெயரிட்டுள்ளார். A முதல் Z வரை ஒரு ஆங்கில ஆத்திச்சூடி - புதிய முயற்சி. வ.மா. குலேந்திரனின் இப் படைப்பு துணிச்சல் மிக்கது. இன்றைய தமிழ்ச்சூழலில் இலக்கிய வரலாற்றில் தனக்கென ஒரு இடத்தை தக்கவைப்பார். அய்க்கூ கவிதைகளைப் போன்று சின்னச் சின்னத்துளிகள் பெரிய பெரிய சுனாமி அலைகளாய் சிந்தனைகளில். குவைத்தில் இரண்டு நாளில் எழுதியதாக ஆசிரியர் குறிப்பு. அகம் உடைய ஒருவரின் உள்மன உணர்வுகளின் தொகுப்பு என தலைப்பை பொருள் படுத்தலாம். **மணிமேகலைப் பிரசுரம். த. பெ. எண்.1447, தி.நகர், சென்னை - 17 ரூ. 25/-**



# குடையின் கீழ் வானம்

அய்க்கூ உலகில் நன்கு அறியப்பட்ட வதிலை பிரபாவும் செல்லம்மாள் கண்ணனும் சேர்ந்து ஒரு கூட்டுக் கவிதைத் தொகுப்பை உருவாக்கி உள்ளார்கள். 35 கவிஞர்களின் ஆக்கங்களும் நிழற்படங்களும் புதிய பதிவுகள். கவிஞர் ம.தி.சாந்தன் படைப்புகள் தனித்த சிந்தனையோடும் அழகோடும் மிளிர்கின்றன. செல்வி மரியதெரசா, முனைவர் கஸ்தூரிராஜா, கு. அ. தமிழ்மொழி மூவரது எழுத்துக்களும் பெண்ணியம் பேசுகின்றன. இத் தொகுப்பில் எங்கு பார்த்தாலும் முரண்பாடுகளை அய்க்கூவாக்கி இருக்கிறார்கள் கவிஞர்கள். யப்பான் தேசத்து வளமை இங்கு இல்லையே ! இவர்கள் என்ன செய்வார்கள் ? பருவ நிலைகளையும், அழகு களிப்புகளையும் பாடத்தான் எல்லோருக்கும் ஆசை. வறுமை, வேலையின்மை, இலஞ்சம், ஊழல், அரசியல் சித்து விளையாட்டு... அனைத்தையும் அரங்கத்தில் கொண்டுவர குடையின் கீழ் வானம் ஒன்றுஉருவாகி இருப்பது பாராட்டுக்குரியது. மாதம் மும்மாரி பொழியட்டும். **ஓவியா பதிப்பகம் 9-6-18/2 ஒற்றைத் தெரு, வத்தலக்குண்டு - 624 202 விலை ரூ.30/-**



# காற்று வெளி

இலண்டனில் இருந்து வெளிவந்துள்ள காற்று வெளி சனவரி - 2006 இதழ், காஞ்சிபுரம் இலக்கிய வட்டத்தினரால் நமக்கு அனுப்பப்பட்டுள்ளது. தோழர் ஷோபாவின் தலையங்க வரிகள் அவரைப்போலவே நம்மையும் சிந்திக்கத் தூண்டுகிறது. "தமிழின் சிறப்பு" கவிதையை மதுமிதா நன்றாக புனைந்துள்ளார். ஈழத்துகலாயோகி ஆனந்தக்குமார சுவாமி பற்றி திருமதி கந்தசாமியும் அஜந்தாவும் நினைவுகளை அருமையாக முன்னிருத்துகிறார்கள். கவிஞர்கள் த. சரீஷ், நவஜோதி யோகரட்ணம், வண்ணைதெய்வம், இரவிவர்மன் கவிதைகள் இதழுக்கு கனம் சேர்க்கின்றன. நமது ஈழநாடு பத்திரிகையில் இருந்து மறு பிரசுரமான மாயாவதியின் கதைக்கரு அற்பதமான வகையில் கையாளப்பட்டு உள்ளது. விடைகளுக்கு அப்பால் என்ற நந்தியின் அலசல் மனித மனங்களின் இரகசிய நடவடிக்கைகளை வெளிச்சத்துக்கு கொண்டு வந்திருக்கிறது. முகவரி : **34, Redriffe Road, Plaistow, LONDON E13 OJX**






படிப்பகம்

www.padippakam.com

## மதவெறியைத் தூண்டிவிடும்

# ஆனந்த விகடனும் மதனும்



- ம. கிருட்டிணமூர்த்தி, புதுக்கோட்டை-1.

ஒரு காலத்தில் அறிவுக்கு விருந்தளித்த ஆனந்த விகடன் என்ற வார இதழ் இன்று சினிமாக்காரிகளின் தொடை, தொப்புள், மார்பு அழகைப் படம் போட்டுக்காட்டி, தமிழர்களின் சிந்தனையைச் சிதறடித்து, தமிழ்க் கலாச்சாரத்திற்குச் சவால் விடுவதோடு மதன் என்ற வெறியனைக் கொண்டு மதவெறியைத் தூண்டும் கட்டுரைகளை, சரித்திரப் புரட்டுகளை எழுதி வெளியிடுகிறது, மட்டுமல்லாமல் தமிழையும் தமிழ் அறிஞர்களையும் கேவலப்படுத்துவதையும் குறிக்கோளாகக் கொண்டு பல நல்லறிஞர்கள் சூடு கொடுத்தும் திருந்தாது, கற்கால வேதகால ஆரியக் காட்டு மிராண்டி வாழ்விற்கு இந்நாட்டை மீண்டும் இட்டுச் செல்லும் வேலைகளைச் செய்து பயங்கர வாதத்திற்கு நெய்யூற்றி வேள்வி நடத்துகிறது.

காட்டு மிராண்டிகளாய் இந்நாட்டில் குடியேறிய இப் பார்ப்பனர்களை இந்திய மண்ணின் மைந்தர்கள் என்றும் இவர்களைத் தொடர்ந்து வந்த முஸ்லீம்களை வந்தார்கள் வென்றார்கள் என்றும் அவர்களை இழிவுபடுத்தி, அதே சமயம் அவர்கள் ஆற்றிய நற்காரியங்கள் எதனையும் வெளியிடாது மறைத்து, தமிழை இழித்து வள்ளுவரை இகழ்ந்து, சரித்திரப் புரட்டு செய்துவரும் விகடனும் மதனும் சுஜாதா, சோ, இராமகோபாலனும் தமிழ் மண்ணில் பயங்கர வாதத்தை வளர்த்து வருவதை சுரணையற்ற சில தமிழர்கள் ஆதரித்து வருவதாலேயே இப்போது கிறிஸ்துவம் பற்றியும் பொய், புரளியைக் கிளப்பத் துவங்கியுள்ளனர்.

வாசகர்களே, ஆனந்தவிகடன் 6-11-2005 நாளிட்ட இதழில் மதன் கேள்வி பதில் பகுதியில் ஒரு கேள்வி இப்படி...

"நான் கடவுள் இல்லை. நாம் எல்லோரும் கடவுளின் பிள்ளைகள்" என்று தானே இயேசு சொன்னார். அவரையே கடவுளாக்கி விட்டார்களே. இது சரியா? என்று கேள்வி கேட்டிருப்பவர் கோவை பாஸ், கோவை - 1.

அதற்கு மதன் தரும் பதில் இப்படி....

"யார் சொன்னது? எதையுமே படித்துத் தெரிந்து கொள்ளாத யாரோ ஒரு நண்பர் உங்களிடம் இப்படித் தப்பாகச் சொல்லி இருக்கலாம் பாஸ். கிறித்தவர்கள் ஏசுபிரானை இறைத்தூதராகத்தான் கருதுகிறார்கள். இரு தச்சுத் தொழிலாளருக்குப் பிறந்து மக்களிடையே வாழ்ந்து அவர்களுக்காக உயிர்த் தியாகம் செய்தவர் இயேசு."

இவ்வாறு மதன் கூறியிருக்கும் பதில் கத்தோலிக்கத்தின் அடிப்படையையே அசைப்பதுபோல் உள்ளது.

இதை மதன் வேண்டுமென்றே செய்தாரா (சொன்னாரா) அல்லது அறியாமல் செய்தாரா (சொன்னாரா) என்பது தெரியாது. ஆனாலும் அறியாமல் செய்கிறார்கள் ஆண்டவரே இவர்களை மன்னியும் என்ற வேண்டுதலோடு...

இப்படிப்பட்ட தவறுகளை இனிமேல் செய்யாதிருக்கட்டும் என்ற எண்ணத்துடன் இவரது லட்சியமே பொய்யும் புரட்டுமான வரலாற்றை எழுதி மத விரோதத்தை வளர்க்கும் செயலாகவே இருக்க இனி திருந்துவதாவது மண்ணாவது !)

இயேசுவை இறைத்தூதர் என்று சொல்வது சரிதானா என்று அருட்பணியாளர் மரியடல்லசிடம் கேட்டேன். தமிழகத்தில் சிவகங்கை மறைமாவட்டத்தைச்சேர்ந்தவர். உரோமை விவிலியப் பல்கலைக் கழகத்தில் விவிலிய ஆய்வு மாணவராக இருப்பவர். அவரிடம் இந்த மதனின் பதிலை முன்வைத்து விளக்கம் கேட்டேன். அருட்பணியாளர் மரியடல்லஸ் கூறும் விளக்கத்தைப் படியுங்கள்.

இயேசுவை இறைத்தூதர் மட்டும் தான் என்று எழுதி தேவையற்ற விவாதத்தைக் கிளப்பியுள்ளனர். அவர்கள் அறிவுத்தெளிவு இல்லாமல் (பல பார்ப்பன ஆதரவு நூல்களை குறிப்பாக, கோல்வால்கரின் A Bunch of Thoughts என்ற நூலைப் படித்துத் தெளிவு பெற்றவராயிற்றே) எழுதி விட்டார்கள் இச்சிற்றுரை அவர்களுக்குப் பதில் தரும்.

வாதம் செய்வதற்காக எழுதியிருப்பார்கள் என்றால் இது சரியான வைத்தியம் செய்யும். வியாபார நோக்கத்தோடு எழுதியிருந்தால் இது எங்களின் நூற்றாண்டுப் பாரம்பரிய நம்பிக்கையையும் இன்றைய எங்களின் விசுவாச வாழ்க்கையையும் தெளிவாக்கும்.



படிப்பகம்

www.padippakam.com

இயேசுவின் பிறப்பிற்கு முந்தைய பல நூற்றாண்டு விவிலிய வரலாற்றிலோ, அவரின் பிறப்பை ஒட்டிய நிகழ்ச்சியின் போதோ, அவர் வாழ்ந்த காலகட்டத்திலோ ஏன், இன்று வரை உள்ள பல நூற்றாண்டு திருச்சபையின் போதனைகளிலோ, ஆன்மிக இலக்கியங்களிலோ ஏசுவைத் தூதர் என்று எங்குமே குறிப்பிடவில்லை.

விவிலியம் 526 முறை பல்வேறு பொருள்களில் பல்வேறு பணிகளைக் குறித்துக் காட்ட, தூதர் அதாவது மலாக் என்ற எபிரேயச் சொல்லையும் ஆங்கிரோஸ் என்ற கிரேக்கச் சொல்லையும் பயன்படுத்துகிறது. ஒருமுறை கூட இச்சொல்லை ஏசுவைக் குறித்து காட்டப் பயன்படுத்தவில்லை என்பதை அறிய வேண்டியது அவசியமாகும்.

என்ன பொருளில் இயேசுவைத் தூதர் எனக் குறித்துக் காட்ட விரும்புகிறார்? தூதர் என்றால் அனுப்பியவரின் செய்தியை எடுத்துச் செல்பவர். தன்னை அனுப்பியவரை ஏறக்குறைய பிரதிநிதிப் படுத்துபவர்.

முதலில் - தூதர் என்ற சொல் விவிலியத்தில் மானிடத் தூதர்களைக் குறித்துக் காட்ட பயன்படுத்தப்பட்டு உள்ளது. யாக்கோபு தன் சகோதரர் ஏசாவைச் சந்திக்குமுன் சிலரை முன் கூட்டியே அனுப்பி வைக்கிறார். அவர்களைத் தூதர்(கள்) என்கிறது விவிலியம் - மோசே ஏதோம் மன்னரிடம் சிலரை அனுப்பினான் அவர்களைத் தூதர்(கள்) என்கிறது விவிலியம்.

இரண்டாவதாக - தூதர் என்ற சொல் கடவுளின் தூதர் என்ற பொருளில் இறைவாக்கினர்களை, குருக்களை, இயற்கையில் உள்ள காற்றுக்களையும் குறித்துக் காட்ட பயன்படுத்தப்பட்டு உள்ளது.

மூன்றாவதாக - தூதர் என்ற சொல் இறைவனால் அனுப்பப்படும் வானவ தூதர்களைக் குறித்துக்காட்டவும் பயன் படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால், இயேசுவை ஆண்டவர் எனவும், கிறிஸ்து எனவும், மீட்பர் எனவும், இறைமகன் எனவும், மானிடமகன் எனவும், மெசியா எனவும், ரபி எனவும், விவிலியம் அழைக்கிறதே தவிர தூதர் என்று ஒரு இடத்திலும் அழைக்கவில்லை.

தூதர்கள், இறைத் தூதர்கள் என அழைத்திருப்பதை திருச்சபையின் 20 நூற்றாண்டு வரலாறு திருச்சபையின் பல நூற்றாண்டு வாழ்வில்... ஆன்மிக இலக்கியங்களிலும் தூதர் என்று ஒரு போதும் குறிப்பிடவில்லை. மாறாக இறைவன், கடவுள் என்று குறிப்பிடப்படுகிறது. எனவே, அறிவிலிகளாய் இருப்பவர்கள் இவ் உண்மையைக் கற்றுக் கொள்ளட்டும். ■

## ஒற்றைத் துளி!

ஓர்
அந்திசாயும் பொழுதில்
யதார்த்தமாய்
இருவரும் பேசிக் கொண்டே
நடக்க ஆரம்பித்தோம்....

சாலையில்
பேருந்து நெரிசலும்
பயணியர் கூட்டமும்
நம்மை நெருங்க வைத்தன...

சற்றுத் தொலைவில்
மௌனத்தின்
தனிமையில் பேசினோம்...
மேகங்கள் கருத்தறிக்க
மழை பெய்யத் தொடங்கியது.

நீ.
உன் தாவணியை - எனக்கு
குடையாய்ப் பிடித்தாய்.
நான் - என் உள்ளங்கையை
உனக்குக் குடையாய்ப் பிடித்தேன்.

இருவருக்கும்
உள்ள நெருக்கம் அதிகமானது.

மழை நிற்கத் தொடங்கியது
உன் விழியிலிருந்து
ஒற்றைத்துளி விழத் தொடங்கியது.

என்
விழி சரியாய் படம் பிடித்தது.

- இரா. சந்திரன்,
நாமகிரிப்பேட்டை, நாமக்கல்.

ஏழைதாசன் உங்கள் இல்லம்
தேடிவர ஆண்டுக் கட்டணம்
ரூ. 60/- பணவிடை
அனுப்புங்களேன்.



படிப்பகம்

www.padippakam.com



## போதைப் பழக்கத்திலிருந்து விடுபட ஒரே வேளை மூலிகை உணவு

### மூலிகை வைத்தியர் தேவூர் மணிவாசகம் சாதனை

எல்லா வகையான போதைப் பழக்கத்தில் இருந்தும் கீழாநெல்லி, கடுக்காய் போன்ற கூட்டு மூலிகை உணவின் மூலம் ஒரே வேளை இளநீரில் கலந்து சாப்பிட்டு விடுபடலாம். இம் மூலிகை உணவு காரைக்கால், சென்னை, திருச்சி, மதுரை, சூரியனார்கோவில் போன்ற இடங்களில் பலருக்கு கொடுக்கப்பட்டு நன்கு பலன் கிடைத்து உள்ளது. இச் சாதனையாளரின் முகவரி : மரு.கோ. மணிவாசகம், தேவூர் - 611 109, கீழ்வேளூர் வட்டம், நாகை மாவட்டம். போன் : 04366 - 275372 இச்செய்தியை எல்லாப் பத்திரிகைகளும் வெளியிட்டு மூலிகையின் புகழை உலகறியச் செய்யலாம்.

### வத்திக்கான் வானொலியின்

**இந்தியா , இலங்கை மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கான தமிழ் ஒலிபரப்பு**

**நிகழ்ச்சி நிரல்**

| | | |
|---|---|---|
| திங்கள் | : | பல்சுவை, அஞ்சல் பெட்டி |
| செவ்வாய் | : | வேர்களும் விழுதுகளும் |
| புதன் | : | நாடகம், ஒரு கணம் ஒரு யுகம் |
| வியாழன் | : | திருத்தந்தையின் புதன் மறைப் போதகம் / ஆசியக் கனவுகள் |
| வெள்ளி | : | நேர்காணல் |
| சனி | : | மனதின் மறுபக்கம் |
| ஞாயிறு | : | ஞாயிறு சிந்தனை, கனவு கைப்பட வேண்டும். |

இறுதி 5 நிமிடம் செய்திகள்.(ஞாயிறு மாலை மற்றும் திங்கள் காலை தவிர)

### அலைவரிசை விவரம்

| காலை | IST | UTC | மொழி | UTC | IST | மாலை |
|---|---|---|---|---|---|---|
| 31 MB 9650 Khz | 06.10 | 00.40 | இந்தி | 14.30 | 08.00 | 25 MB 12065 Khz |
| | 06.30 | 01.00 | தமிழ் | 14.50 | 08.20 | |
| 25 MB 12055 Khz | 06.50 | 01.20 | மலையாளம் | 15.10 | 08.40 | 22 MB 13765 Khz |
| | 07.10 | 01.40 | ஆங்கிலம் | 15.30 | 09.00 | 19 MB 15235 Khz |

**இலட்சத்தீவில் ஏழைதாசன்**

இரா. வசந்தசேனன் இலட்சத்தீவில் இருந்து எழுதிக் கொள்வது. வணக்கம். வாழ்த்துக்கள். ஏழைதாசன் இதழ்கள் மூலம் தங்கள் அறிமுகம் பெற்றேன். மேதகு இந்தியக் குடியரசுத் தலைவரின் பாராட்டுதல்களை தங்கள் சேவை பெற்றுத் தந்திருக்கின்றது என்பதை அறிந்து பெருமகிழ்ச்சியுற்றேன்.

- இரா. வசந்தசேனன், தொழில் நுட்ப அலுவலர்,(CPCRI) மினிக்காய், இலட்சத்தீவு.



படிப்பகம்

www.padippakam.com

# வாசகர் வட்டம்

உணர்ச்சிக் கவிஞர் சிங்காரவேலன் கவிதை நன்று. கருத்தும் நன்று. படிப்போருக்கு இன எழுச்சி எழும்பிடும் தமிழ் உணர்ச்சி ததும்பும் தங்கள் இதழ் வளர்ச்சிக்கு வாழ்த்துக்கள் ரூ. 60/- நன்கொடை அனுப்பி உள்ளேன்.

**- எம்.எஸ். வெங்கடாசலம்,** திருச்சி-1.

ஏழைதாசன் வர வர உயர்ந்து வருவதை உணர்கிறேன். தமிழின கேடயமாய், தமிழார்வ அமுதருவியாய், தமிழ் வேள்வியாய், எழுச்சியாய், உணர்வுகளின் பெட்டகமாய், தமிழை வாழ வைக்கும் ஒரு சக்தியாய் ஏழைதாசன் பவனி வருவது கண்டு, கரங்களில் தவழும் போதெல்லாம் மகிழ்கிறேன். தங்கள் சேவைக்கு முன்.. இடையூறுகளும் தடை நூறுகளும் தவிடு பொடியாகி, இதழியல் வானில் இன்னொரு விடி நிலாவாக விளங்க வாழ்த்துகிறேன்.

**- எம். இராமதாசன்,**
அஞ்சல் அலுவலர், பள்ளத்தூர் வடக்கு

தொடர்ந்து ஏழைதாசன் அனுப்பி உதவியமைக்கு மிக நன்றி. 14ஆவது ஆண்டுத் துவக்கத்திற்கு வாழ்த்துக்கள். இளமை மிடுக்கோடு பருவ வயது வசீகரத்தோடு ஏழைதாசன் மேலும் புதுப்பொலிவு பெற்று வாசகர்களை ஈர்த்திட வாழ்த்துக்கள். இத்துடன் ரூ. 100/- இதழ் வளர்ச்சிக்காக அனுப்புகிறேன்.

**- ஆரிசன்,** வந்தவாசி, தி.மலை.

ஏழைதாசன் மாத இதழுக்கு ஆண்டுச் சந்தா அனுப்பிஉள்ளேன். இதழ் அனுப்பி வைக்க வேண்டுகிறேன். தங்கள் தமிழ்ப்பணி சிறக்க வாழ்த்துகிறேன்.

**- தமிழியலன்,** திருவண்ணாமலை.

தங்கள் ஏழைதாசன் இதழ் திங்கள் தோறும் பயனுடைய தகவல்களைத் தாங்கி வந்து கொண்டு உள்ளது. குறிப்பாக புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களை இணைக்கும் பாலமாக இதழ் திகழ்கிறது. ஈழத் தமிழ் மக்களின் வேதனைகளுக்கு மருந்தாகப் பல கட்டுரைகளும் கவிதைகளும் வெளிவந்து கொண்டுள்ளன. தங்களுக்கு வெளிநாடுகளில் வாழும் தமிழ் அறிஞர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், முதலியோரை ஊக்குவிக்கும் உயர்ந்த உள்ளம்-தூய உள்ளம் - தாயுள்ளம் உள்ளது.

**- டாக்டர்.ஆடலரசு**
ஆசிரியர் / சக்தியுகம் / கோவை -45

சிங்கப்பூர் தேசியநாள் பாடல் போட்டியில் ஒரு தமிழ்ப் பாடல் முதல் பரிசைப் பெற்றுள்ளது மிகுந்த மகிழ்வையும், தமிழின் மேன்மை குறித்த மன நெகிழ்வையும் தருகிறது. கவிஞர் அமலதாசன் அவர்களின் பாடலில் இடம்பெற்ற "இனங்கள் நான்கும் இணைந்து வாழும்" என்ற வரி அந்நாட்டின் கலாச்சாரப் பிணைவை அடையாளம் காட்டுகிறது. தமிழ்முரசு குறித்த செய்திகள் நெற்றியடி. உலகத்தமிழ்க் கவிதைப் போட்டியில் கவிஞர்களின் பங்கேற்புகள், பரிசு

## இலண்டனில் ஏழைதாசன்

புத்தகக் கடைகள், பத்திரிகை அலுவலகங்கள், தமிழ்ச் சங்கங்கள், தமிழர் அமைப்புகள், நூலகங்கள், தமிழ் வானொலிகள், தொலைக் காட்சிகள், கவிஞர்கள், எழுத்தாளர்கள் உள்ளிட்ட புலம் பெயர்ந்த தமிழர்கள் என நூற்றுக்கணக்கான இதழ்கள் திங்கள் தோறும் படித்து வருகிறார்கள்.

பெறல்கள் குறித்த கட்டுரை நெஞ்சத்தில் நிறைவைத் தந்தது. பத்திரிகையாளர் வ. மா. குலேந்திரன் அவர்கள் குறித்த கட்டுரை என் போன்ற வளரும் பத்திரிகையாளர்களுக்கு பயனுள்ளது. பாராட்டுக்கள்.

**- கவிஞர். ஏகலைவன்,** சேலம் - 15.

உணர்ச்சிக் கவிஞர் சிங்கார வேலன் கவிதை மிக அருமை. பிரான்சு கவிஞர் பாரதிதாசன் கவிதை பொங்கல் வாழ்த்துபொருள் நன்று. ஆனால் ஏராளமான தட்டுதல்கள். புதுக்கவிதைகள் பரவாயில்லை. பொதுவாக இதழ் ஒளிர்கிறது.

**- கல்லைக் கவிமுரசு,**
ஆசிரியர், சோலைக் குயில், விழுப்புரம்.

சும்மா "நச்" ன்னு இருக்கு தமிழ்முரசு - குறிப்பினை நான் நடத்துகிற தமிழம் இணையத்தில் சுவைத்தப் பக்கங்கள் பகுதியில் இணைத்து உள்ளேன். பார்க்கவும்.

**- பொள்ளாச்சி நசன்.**

பாவலர் கருமலைப் பழம் நீயின் மூன்று குரங்குகள் பற்றிய புதிய பார்வை நன்று. ஒவ்வொரு பழமையான விசயங்களையும் இப்படியான ஒரு புதிய பார்வைக்கு உட்படுத்துதல் இளைய தலைமுறைக்கு மிக அவசியமே. தமிழ் முரசு பற்றிய விமர்சனம் சும்மா நச்சுன்னு இருந்தது. மேலும் இதழில் இடம் பெற்றுள்ள கவிதைகள், புத்தாண்டுத்துளிகள், இலக்கியம் சார்ந்த செய்திகள் அனைத்தும் சுவை கூட்டின. அச்சமைப்பு வரவர மெருகேறுகிறது. தொடர்ச்சியான தங்களது இலக்கியச் சேவை சிகரம் எட்டும் நிச்சயம்.

**- சு. கணேஷ்குமார்,** வேளச்சேரி.

அறிஞர் பெருமகனார் அமலதாசனார் முதற்பரிசு பெற்ற சேதி உளம் பூரிப்பதொன்று. மூன்று குரங்குகள் பற்றியதான புதிய பார்வைக் கவிதை கவிஞரின் கற்பனைத் திறத்தோடு, அல்லாத செயல்களின் தன்மையையும் சுவையாய் சுட்டியது. சொல்வங்கியின் பயன்பாடு அரிதின் முயற்சி. பொங்கும் வார்த்தை நயத்தில் நம் மனதை கொள்ளை கொண்டார் பிரான்சு கவிஞர் பாரதிதாசனார். பொன்னண்ணா அவர்களின் செய்தி உளமகிழ்சேதி. இலண்டன் சுடரொளி கழகத்தாரின் கவிப்போட்டியின் வெற்றியாளர்களுக்கு தமிழ் நாட்டுத்தாய் மண்ணில் பரிசளிப்பு விழா நடத்தி அற்புத உரைநிகழ்த்திய அறிஞர்களும் சொற்குவியல் நெஞ்சம் நிலைறந்த ஒன்று.

**- சேர. சச்சிதானந்தன்,** நாமக்கல் - 1.



படிப்பகம்

www.padippakam.com






படிப்பகம்

www.padippakam.com

EALAIDHASON * TAMIL MONTHLY * R.N.I. Regd. No. 55308/92
R.C. No. 22449/98 * Registered No. TN/PDK/03/06-08



1995 ஆம் ஆண்டு வாக்கில் நண்பர் திரு. இரா. ஜெயராமன் திருமணம் கும்பகோணத்தில் நடைபெற்றது. அப்போது மணமக்களை நேரில் வாழ்த்துகிறார் ஏழைதாசன் ஆசிரியர் விஜயகுமார். இன்று பெங்களூரில் தனியார் நிறுவனமொன்றில் பொறியாளராக பணியாற்றி வருகிறார். குடும்பம் சென்னையில் வசிக்கிறது. இவ்விணையர்களுக்கு சிறுவயது மகனும் உண்டு. இவரது அன்னார் திரு. இரா. இரவிக்குமார் இராணிப்பேட்டையில் பொறியாளராக உள்ளார். இவர் மனைவியும் பொறிஞரே. இருவரும் ஏழைதாசன் இதழுக்கு வாழ்நாள் நன்கொடை வழங்கி பெருமைப்படுத்தி உள்ளார்கள். அவர்கள் அன்புக்குத் தலை வணங்குகிறோம்.

பெறுநர் திரு.

Published, Printed and Owned by S. Vijayakumar
Printed at Ealaidhason Printers, Pudukkottai - 2. Published from 26, Adappanvayal 8th Street, Pudukkottai - 2, Tamil Nadu, INDIA. Editor : **S. VIJAYAKUMAR**, B.A.,
Telephone No. 0091 - 04322 - 226 426. Cell Phone No. : 94427 - 76868

படிப்பகம்